அறிவாளி
தமிழ்
பயிற்சிப் புத்தகம்

பத்தாம் வகுப்பு

அலகு வாரியாக
தொகுக்கப்பட்ட வினாக்கள்

இவ்வினாக்களுக்கான விடைகள்
பத்தாம் வகுப்பு அறிவாளி தமிழ் நூலில்
கொடுக்கப்பட்டுள்ளன

கௌசெல்ராமு பதிப்பகம் பி.லிட்.

728, 7ஆவது பிளாக், முகப்பேர் மேற்கு, சென்னை - 600 037.
போன் : 044-26535245 ; அலைபேசி : 9176629095
மின்னஞ்சல் : kouselramu97@gmail.in

விலை : ₹ 60

பொருளடக்கம்

வினா எண்	தலைப்பு	பக்கம்
	பாடநூல் வினாக்கள்	
	(பலவுள் தெரிக, குறுவினா, சிறுவினா, நெடுவினா, மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு, நிற்க அதற்குத் தக ..., கற்பவை கற்றபின் ...)	
	அலகு-1	4
	அலகு-2	11
	அலகு-3	17
	அலகு-4	25
	அலகு-5	30
	அலகு-6	37
	அலகு-7	43
21	மனப்பாடப்பகுதி (திருக்குறள்)	49
34	மனப்பாடப்பகுதி (பிற செய்யுள் பகுதிகள்)	49
39	கடிதம் எழுதுதல்	50
40	காட்சியைக் கண்டு கவினுற எழுதுதல்	51
41	படிவம் நிரப்புதல்	52
	விளையாட்டு ஆணையம் உறுப்பினர் சேர்க்கைப் படிவம்	53
	பணி வாய்ப்பு வேண்டித் தன்விவரப் படிவம்	54
	நூலக உறுப்பினர் படிவம்	55
	மேல்நிலை வகுப்பு - சேர்க்கை விண்ணப்பம்	56
42	மொழிபெயர்த்தல்	57
45	பொதுக்கட்டுரைகள்	58
	கலைச்சொற்கள் எழுதுதல்	59
	பகுபத உறுப்பிலக்கணம்	59
	தமிழ் எண்கள் எழுதுதல்	59
	விடைக்கேற்ற வினா அமைத்தல்	60
	உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருதல்	61
	அலகிட்டு வாய்பாடு தருதல்	63
	அணியிலக்கணம்	63

----------x----------x----------

10ஆம் வகுப்பு தமிழ் பாடத்தில் எளிமையாக மதிப்பெண்கள் பெற பயிற்சி செய்ய வேண்டிய பாடப் பகுதிகள்

வினா எண்	பாடப்பகுதி	மதிப் பெண்	மொத் தம்
1-15	பலவுள் தெரிக வினாக்கள்	15	55 மனப்பாடம் இல்லாமல் பயிற்சி மட்டுமே போதுமானது
41	படிவம் நிரப்புதல்	5	
30	உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருதல்	3	
17	விடைக்கேற்ற வினா அமைத்தல்	2	
22-28	கலைச் சொற்கள்	2	
22-28	பகுபத உறுப்பிலக்கணம்	2	
42ஆ	மொழி பெயர்த்தல்	5	
40	படம் உணர்த்தும் கருத்தை கவினுற எழுதுதல்	5	
39அ	கடிதம் எழுதுதல்	5	
45ஆ	பொதுக்கட்டுரை எழுதுதல்	8	
35-37	அலகிட்டு வாய்பாடு தருதல்	3	
21	திருக்குறள் - மனப்பாடப்பகுதி	2	45 மனப்பாடம் செய்ய வேண்டும்
34	திருக்குறள் அல்லாத மனப்பாடப்பகுதி	3	
16-28	முக்கியமான 2 மதிப்பெண் வினாக்கள்	10	
29-37	முக்கியமான 3 மதிப்பெண் வினாக்கள்	9	
38	முக்கியமான 5 மதிப்பெண் வினாக்கள்	5	
43,44	முக்கியமான 8 மதிப்பெண் வினாக்கள்	16	
	மொத்த மதிப்பெண்கள்		100

அலகு-1

பலவுள் தெரிக

1. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் எது?
   (அ) இகழ்ந்தால் என்மனம் இறந்து விடாது (ஆ)என்மனம் இகழ்ந்தால் இறந்து விடாது
   (இ) இகழ்ந்தால் இறந்து விடாது என்மனம் (ஈ) என்மனம் இறந்து விடாது இகழ்ந்தால்

2. 'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது -
   (அ) இலையும் சருகும் (ஆ)தோகையும் சண்டும்
   (இ) தாளும் ஓலையும் (ஈ) சருகும் சண்டும்

3. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும் -
   (அ) எந் + தமிழ் + நா (ஆ)எந்த + தமிழ் + நா
   (இ) எம் + தமிழ் + நா (ஈ) எந்தம் + தமிழ் + நா

4. 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' - தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே -
   (அ) பாடிய; கேட்டவர் (ஆ)பாடல்; பாடிய
   (இ) கேட்டவர்; பாடிய (ஈ) பாடல்; கேட்டவர்

5. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிப்பது -
   (அ) குலைப்பெயர் வகை (ஆ)மணிப்பெயர் வகை
   (இ) கிளைப்பெயர் வகை (ஈ) இலைப்பெயர் வகை

6. ஆலும் வேலும் பல்லுக்குறுதி,
   நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி - இத்தொடர்கள் உணர்த்தும் மரங்களின் பெயர்களையும் தமிழெண்களையும் குறிப்பிடுக.
   (அ) ஆலமரம், வேப்பமரம் - ரு, க (ஆ)ஆலமரம், வேலமரம் - சு, உ
   (இ) அரசமரம், வேங்கைமரம் - க, உ (ஈ) வேப்பமரம், ஆலமரம் - சு, சூ

7. ''நாற்றிசையும் செல்லாத நாடில்லை'' ; ''ஐந்து சால்பு ஊன்றிய தூண்'' - இந்த செய்யுள் அடிகளில் இடம்பெற்றுள்ள எண்ணுப்பெயர்களையும் அவற்றிற்கான தமிழ் எண்களையும் தேர்க.
   (அ) நான்கு, ஐந்து - சு, ரு (ஆ)மூன்று, நான்கு - ௩, சு
   (இ) ஐந்து, ஏழு - ரு, எ (ஈ) நான்கு, ஆறு - சு, சூ

8. ஓர் ஆண்டின் மொத்த மாதங்களின் எண்ணிக்கையினைக் குறிக்கும் தமிழ் எண்ணைத் தேர்ந்தெடுக்க.
   (அ) க ரு (ஆ) க உ (இ) க ௩ (ஈ) க சு

9. 'மொழி ஞாயிறு' என்றழைக்கப்படுபவர் யார்?
   (அ) தமிழழகனார் (ஆ)கம்பர்
   (இ) தேவநேயப் பாவாணர் (ஈ) வைரமுத்து

10. 'சாகும் போதும் தமிழ் படித்துச் சாக வேண்டும் - என்றன்
சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்' - என்று கூறியவர்
(அ) திரு.வி.க (ஆ) க. சச்சிதானந்தன் (இ) நம்பூதனார் (ஈ) தனிநாயக அடிகள்

11. உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு
(அ) சிங்கப்பூர் (ஆ) மலேசியா (இ) இந்தியா (ஈ) இலங்கை

12. மலர்விழி பாடினாள் - இத்தொடர்
(அ) பொதுமொழி (ஆ) தனிமொழி (இ) தொடர்மொழி (ஈ) அடுக்குத்தொடர்

13. தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிப்பது
(அ) தொழிற்பெயர் (ஆ)முதனிலை திரிந்த தொழிற்பெயர்
(இ) முதனிலைத் தொழிற்பெயர் (ஈ) வினையாலணையும் பெயர்

14. கொடுக்கப்பட்ட அனைத்துச் சொற்களும் அமைந்த பொருத்தமான தொடரைத் தேர்க.
(மலை, மழை, மேகம், ஆறு, ஏரி, குளம்)
(அ) மலைமீது மழை பெய்து ஆற்று வெள்ளம் ஊரின் வழியே பெருக்கெடுத்து ஓடியது.
(ஆ) கருத்த மேகம் மலைமீது மழையைப் பொழிய ஆறு, ஏரி, குளம், அனைத்தும் நீரால் நிரம்பின.
(இ) திரண்ட மேகங்கள் மலையில் மாரியாகி ஆறு, ஏரி, குளங்களில் நிறைந்தன.
(ஈ) மலைமீது மழைபொழிய ஏரி குளங்கள் நிறைந்து பின் கடலில் சென்று கலந்தது.

15. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க.

(1) வினைமுற்று	(i) கெடு
(2) தொழிற்பெயர்	(ii) கட்டு
(3) முதனிலைத் தொழிற்பெயர்	(iii) எய்தல்
(4) வினையடி	(iv) வந்தான்

(அ) (1) - (iv), (2) - (iii), (3) - (ii), (4) - (i) (ஆ)(1) - (iii), (2) - (i), (3) - (iv), (4) - (ii)
(இ) (1) - (iv), (2) - (iii), (3) - (i), (4) - (ii) (ஈ) (1) - (i), (2) - (iii), (3) - (ii), (4) - (iv)

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (16, 17, 18) விடை தருக.

''செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின்பெருமை
எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும் ?
முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்
விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்.''

16. செந்தமிழ் என்பது
(அ) பண்புத்தொகை (ஆ) வினைத்தொகை (இ) உவமைத்தொகை (ஈ) உம்மைத்தொகை

17. உள்ளுயிரே என்று கவிஞர் யாரை அழைக்கிறார்?
(அ) தம் தாயை (ஆ) தமிழ் மொழியை (இ) தாய் நாட்டை (ஈ) தம் குழந்தையை

18. வேறார் புகழுரையும் - இத்தொடரில் 'வேறார்' என்பது
(அ) தமிழர் (ஆ) சான்றோர் (இ) வேற்றுமொழியினர் (ஈ) புலவர்

குறுவினா

1. 'பலகை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.
2. ''மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!'' - இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.
3. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.
ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.
ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.
மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி, எஞ்சிய தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.
4. ''கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது''
பாடல் அடிகளில் உள்ள மோனை, எதுகைச் சொற்களைக் கண்டறிந்து எழுதுக.
5. சொல்வளத்தை உணர்த்த உதவும் நெல் வகைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
6. ''மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!'' - இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள ஐம்பெருங்காப்பியங்களைத்தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்களை எழுதுக.
7. 'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.
8. தமிழ்நாட்டில் மட்டும் விளையக்கூடிய சிறுகூலங்களின் பெயர்களை எழுதுக.
9. தாவரங்களின் இளம் பயிர் வகைகளைக் குறிக்கும் சொற்களில் நான்கினை எழுதுக.

சிறுவினா

1. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?
2. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது.'
இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.
3. 'அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது, இவை அனைத்தையும் யாம் அறிவோம்.' இக்கூற்றில் அடிக்கோடிட்ட சொற்களைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.
4. இன் சொற்களைப் பேசுவதனால் விளையும் நன்மைகள் ஐந்தினை எழுதுக.
5. 'காலக்கணிதம்' கவிதையில் கவிஞர் கண்ணதாசன் குறிப்பிட்டுள்ள கருத்துகளுள் உங்களைக் கவர்ந்த ஐந்து கருத்துகளை எழுதுக.
6. இன்சொல் பேசுவதால் விளையும் நன்மைகள் மற்றும் தீயசொல் பேசுவதால் ஏற்படும் தீமைகளைப் பட்டியலிடுக.

நெடுவினா

1. நாட்டுவளமும் சொல்வளமும் தொடர்புடையது என்பதை பாவாணர் வழிநின்று விளக்குக.
2. காலக்கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.

''கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்

பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!
இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்
இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!
ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை; அறிக!'' - கண்ணதாசன்

3. புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?
4. மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.
5. தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

மொழியை ஆள்வோம்!

1. படித்துச் சுவைக்க. **பாடநூலில் பக்கம்: 17**
2. மொழிபெயர்ப்பு. பார்க்க:**பக்கம்-57 ; வினா எண்-1**
3. பிழைகளைத் திருத்தி எழுதுக.

''தேணிலே ஊரிய செந்தமிழின் - சுவை
தேரும் சிலப்பதி காறமதை
ஊனிலே எம்முயிர் உல்லலவும் - நிதம்
ஓதி யுனர்ந்தின் புருவோமே''

4. கீழ்க்காணும் சொற்களின் கூட்டப்பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக.
(குவியல், குலை, மந்தை, கட்டு)

சொல்	கூட்டப்பெயர்
கல்	
புல்	
பழம்	
ஆடு	

5. வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.
   1. கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள்.
   2. ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.
   3. நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.
   4. பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தார். போட்டித் தேர்வில் வென்றார்.
6. தொடர்களில் உள்ள வண்ணச் (அடிக்கோடிட்டச்) சொற்களுக்குப் பதிலாக அதே பொருளுடைய வேறு சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களை மீள எழுதுக.
   1. உலகில் வாழும் மக்களில் சிலர் கனியிருக்கக் காய் புசித்தலைப்போல, இன்சொல் இருக்க வன்சொல் பேசி இன்னற்படுகின்றனர்.
   2. வள்ளல் குமணன் வறுமையால் வாடிவந்த புலவனுக்குத் தனது தலையைக் கொடுத்து மங்காப் புகழ் பெற்றான்.
   3. நளனும் அவனது துணைவியும் நிடதநாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள் மழைமுகில் கண்ட மஞ்ஞை போலக் களி கொண்டனர்.
   4. சோலையிற் பூத்த மணமலர்களில் சுரும்புகள் மொய்த்துப் பண்பாடி மதுவுண்டன.
   5. பசுப்போல் சாந்தமும் புலிபோல் தீரமும் யானை போல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.

7. கட்டுரை எழுதுக.

குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள்.

இக்கருத்தைக் கருவாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

8. கொடுக்கப்பட்டுள்ள பாடலைப் படித்து நயம் பாராட்டுக.

கவிதையில் உள்ள திரண்ட கருத்து, பொருள் நயம், சொல் நயம், சந்த நயம், தொடை நயம், அணி நயம் ஆகியவை இடம்பெற வேண்டும்.

தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே
தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே
உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே
வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே
மாந்தருக் கிருகணா வயங்குநன் மொழியே
தானனி சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே
தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே

- கா.நமச்சிவாயர்

மொழியோடு விளையாடு

1. சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.
தேன், விளக்கு, மழை, விண், மணி, விலங்கு, செய், மேகலை, வான், பொன், பூ

2. எண்ணுப்பெயர்களைக் கண்டுபிடித்துத் தமிழ் எண்களில் எழுதுக.

தமிழ் எண்கள்

1	க	6	சு
2	உ	7	எ
3	ந	8	அ
4	ச	9	கூ
5	ரு	10	யி
			க0

செய்யுள்அடி	*எண்ணுப்பெயர்*	*தமிழ் எண்*
நாற்றிசையும் செல்லாத நாடில்லை	நான்கு	ச
எறும்புந்தன் கையால் எண்சாண்		
ஐந்துசால்பு ஊன்றிய தூண்		
நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி		
ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி		

3. அகராதியில் காண்க. அடவி, அவல், சுவல், செறு, பழனம், புறவு

4. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக. **பார்க்க: பக்கம்-51 ; படம்-1**

நிற்க அதற்குத் தக ...

1.

இன்சொல் வழி	தீய சொல் வழி
பிறர் மனம் மகிழும்	பிறர் மனம் வாடும்
அறம் வளரும்	அறம் தேயும்
புகழ் பெருகும்	இகழ் பெருகும்
நல்ல நண்பர்கள் சேருவர்	நல்ல நண்பர்கள் விலகுவர்
அன்பு நிறையும்	பகைமை நிறையும்

இதில் நீங்கள் செல்லும் வழி யாது ? உங்கள் நண்பருக்குக் காட்டும் வழி யாது?

2. படிப்போம்; பயன்படுத்துவோம்! (கலைச் சொற்கள் தருக.)
1. Vowel, 2. Consonant, 3. Homograph, 4. Monolingual, 5. Conversation, 6. Discussion

கற்பவை கற்றபின் ...

பாடநூலில் பக்கம்: 3

1. ''நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறமென்று
இத்திறத்த எட்டுத்தொகை''
இச்செய்யுளில் இடம்பெற்றுள்ள எட்டுத்தொகை நூல்களைப் பெயர்க்காரணத்துடன் எடுத்துக்காட்டுக.
2. ''சாகும்போதும் தமிழ்படித்துச் சாகவேண்டும் - என்றன்
சாம்பலும் தமிழ்மணந்து வேகவேண்டும்''
என்றுரைக்கும் க.சச்சிதானந்தன் அவர்களின் பாடலடியைக் கொண்டு உரை எழுதுக.

பாடநூலில் பக்கம்: 7

1. சொல்லுதல் என்பதற்குப் பேசுதல், விளம்புதல், செப்புதல், உரைத்தல், கூறல், இயம்பல், மொழிதல் எனப்பல சொற்கள் உள்ளன. இதைப் போன்று மழை, கடல், யானை போன்றவற்றிற்கு வழங்கப்படும் பல்வேறு பெயர்களைத் தொகுத்து எழுதுக.
2. நாம் பேசும் மொழியில் அதிகமான சொற்களை ஆள்வதால் ஏற்படும் பயன்கள் குறித்து எழுதுக.

பாடநூலில் பக்கம்: 9

1. கவிதைகளை ஒப்பிட்டுக் கருத்து எழுதுக.

கவிச்சக்கரவர்த்தியும் கவியரசும்

நதியின் பிழையன்று; நறும்புனலின்மை; அற்றே
பதியின் பிழையன்று; பயந்து நமைப் புரந்தாள்
மதியின் பிழையன்று; மகன் பிழையன்று; மைந்த!
விதியின் பிழை; நீ இதற்கென்னை வெகுண்டதென்றான்

- கம்பன்

நதிவெள்ளம் காய்ந்து விட்டால்
நதிசெய்த குற்றம் இல்லை
விதிசெய்த குற்றம் அன்றி
வேறு - யாரம்மா!

- கண்ணதாசன்

2. கண்ணதாசனின் கவியரங்கக் கவிதையைச் சுவைத்து அது குறித்து உரை எழுதுக.

கதிர் வெடித்துப் பிழம்பு விழ
கடல் குதித்துச் சூடாற்ற
முதுமை மிகு நிலப் பிறப்பின்
முதற் பிறப்புத் தோன்றி விட
நதி வருமுன் மணல் தரு முன்
நலம் வளர்த்த தமிழணங்கே
பதி மதுரைப் பெருவெளியில்
பாண்டியர் கை பார்த்தவளே!

நின்னை யான் வணங்குவதும்
நீ என்னை வாழ்த்துவதும்
அன்னை மகற்கிடையே
அழகில்லை என்பதனால்
உன்னை வளர்த்து வரும்
ஒண் புகழ் சேர் தண் புலவர்
தன்னை வணங்குகின்றேன்
தமிழ்ப் புலவர் வாழியரோ!

பாடநூலில் பக்கம்: 12

1. கடலில் புயலின் தாக்கத்தினால் ஏற்பட்ட பதற்றத்தை வெளிப்படுத்த அடுக்குத் தொடர்களும் வருணனைகளும் எவ்வாறெல்லாம் பயன்பட்டுள்ளன என்பது குறித்து எழுதுக.
2. நீங்கள் எதிர்கொண்ட இயற்கை இடர் குறித்து விவரித்து எழுதுக.
(மழை, வெள்ளம், புயல், வறட்சி)

பாடநூலில் பக்கம்: 14

1. தேன், நூல், பை, மலர், வா - இத்தனிமொழிகளுடன் சொற்களைச் சேர்த்துத் தொடர்மொழிகளாக்குக.
2. வினை அடியை விகுதிகளுடன் இணைத்துத் தொழிற்பெயர்களை உருவாக்குக. காண், சிரி, படி, தடு
3. தனிமொழி, தொடர்மொழி ஆகியவற்றைக் கொண்டு உரையாடலைத் தொடர்க.

அண்ணன் : எங்கே செல்கிறாய் ? (தொடர் மொழி)
தம்பி : _____ (தனிமொழி)
அண்ணன் : _____ வாங்குகிறாய் ? (தொடர் மொழி)
தம்பி : _____ (தொடர் மொழி)
அண்ணன் : _____ (தனிமொழி)
தம்பி : _____ (தொடர்மொழி)
அண்ணன் : _____
தம்பி : _____

4. மலை என்னை அடிக்கடி அழைக்கும்; மலைமீது ஏறுவேன்; ஓரிடத்தில் அமர்வேன்; மேலும் கீழும் பார்ப்பேன்; சுற்றுமுற்றும் பார்ப்பேன்; மனம் அமைதி எய்தும்.
இத்தொடர்களில் உள்ள வினைமுற்றுகளைத் தனியே எடுத்தெழுதித் தொழிற்பெயர்களாக மாற்றுக.
5. கட்டு, சொட்டு, வழிபாடு, கேடு, பாடுதல் - இத்தொழிற்பெயர்களை வகைப்படுத்துக.

பாடநூலில் பக்கம்: 22

1. மாநில அளவில் நடைபெற்ற 'கலைத்திருவிழா' போட்டியில் பங்கேற்று 'கலையரசன்' பட்டம் பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

==========

மனப்பாடப்பகுதி

வினா எண்-21 (2 மதிப்பெண்கள்)

1. 'எப்பொருள்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.
2. 'பல்லார்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.
3. 'பண்என்னாம்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.
4. 'அருமை' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.
5. 'முயற்சி' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.
6. 'செயற்கை' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.
7. 'பொருளல்லவரை' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.
8. 'குன்றேறி' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.
9. 'குற்றம்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.
10. 'இன்மையின்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.
11. 'அறிவு' என முடியும் திருக்குறளை எழுதுக.
12. 'விடல்' என முடியும் திருக்குறளை எழுதுக.
13. 'கண்' என முடியும் திருக்குறளை எழுதுக.
14. 'தரும்' என முடியும் திருக்குறளை எழுதுக.
15. 'விடும்' என முடியும் திருக்குறளை எழுதுக.
16. 'செயல்' என முடியும் திருக்குறளை எழுதுக.
17. 'பொருள்' என முடியும் திருக்குறளை எழுதுக.
18. 'வினை' என முடியும் திருக்குறளை எழுதுக.
19. 'உலகு' என முடியும் திருக்குறளை எழுதுக.
20. 'இன்னாதது' என முடியும் திருக்குறளை எழுதுக.

வினா எண்-34 (3 மதிப்பெண்கள்)

1. ''அன்னை மொழியே'' எனத் தொடங்கி ''பேரரசே'' என முடியும் பெருஞ்சித்திரனாரின் பாடல்.
2. ''தென்னன்'' எனத் தொடங்கி ''வாழ்த்துவமே'' என முடியும் அன்னைமொழியே பாடல்.
3. ''மாற்றம்'' எனத் தொடங்கி ''சாலை'' என முடியும் காலக்கணிதப் பாடல்
4. ''தலைவர்'' எனத் தொடங்கி ''தொடாது'' என முடியும் காலக்கணிதப் பாடல்
5. ''கொள்வோர்'' எனத் தொடங்கி ''சட்டம்'' என முடியும் காலக்கணிதப் பாடல்
6. ''விருந்தினராக'' எனத் தொடங்கி ''செப்பல்'' என முடியும் காசிக்காண்டம் பாடல்
7. ''பொருந்து'' எனத் தொடங்கி ''பண்பே'' என முடியும் காசிக்காண்டம் பாடல்
8. ''புண்ணியப் புலவீர்'' எனத் தொடங்கும் திருவிளையாடற் புராணப் பாடல்.
9. ''தண்டலை மயில்க ளாடத்'' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல்.
10. ''வெய்யோனொளி'' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல்.
11. ''தூசும் துகிரும்'' எனத் தொடங்கும் சிலப்பதிகாரச் செய்யுள்.
12. ''அள்ளல்'' எனத் தொடங்கும் முத்தொள்ளாயிரம்.
13. ''நவமணி'' எனத் தொடங்கும் தேம்பாவணிப் பாடல்.

படிப்போம்; பயன்படுத்துவோம்! / கலைச்சொற்கள் தருக (2 மதிப்பெண்கள்)

1. 1. Vowel, 2. Consonant, 3. Homograph, 4. Monolingual, 5. Conversation, 6. Discussion
2. 1. Storm, 2. Tornado, 3. Tempest, 4. Land Breeze, 5. Sea Breeze, 6. Whirlwind
3. 1. Hospitality, 2. Wealth, 3. Baby shower, 4. House warming, 5. Feast
4. 1. Translation, 2. Culture, 3. Human Resource, 4. Transfer, 5. Multi media, 6. Exhibition, 7. East Indian Railways, 8. Revolution, 9. Strike, 10. Interpreting, 11. Head phone, 12. Mike, 13. Camel, 14. Telegraph, 15. Television, 16. Telephone, 17. Telescope, 18. Telemetry, 19. Transcribe, 20. Transfer, 21. Transform, 22. Transact
5. 1. Playwright, 2. Screenplay, 3. Storyteller, 4. Aesthetics
6. 1. Agreement, 2. Discourse, 3. Monarchy, 4. Border, 5. Rebellion
7. 1. Happiness, 2. Sceptor, 3. Charity, 4. Gratuity, 5. Truth
8. 1. Artifacts, 2. Myth, 3. Consulate, 4. Folk Literature, 5. Classical Literature, 6. Belief, 7. Philosopher, 8. Patent, 9. Storm, 10. Biotechnology, 11. Emblem

பகுபத உறுப்பிலக்கணம் (2 மதிப்பெண்கள்)

1. கிளர்ந்த 2. உரைத்த 3. வருக 4. பதிந்து 5. அமர்ந்தான்
6. தணிந்தது 7. மயங்கிய 8. கொண்ட 9. அறியேன் 10. ஒலித்து
11. வாழ்க

தமிழ் எண்கள் (1 மதிப்பெண் / 2 மதிப்பெண்கள்)

1. ''நாற்றிசையும் செல்லாத நாடில்லை'' ; ''ஐந்து சால்பு ஊன்றிய தூண்'' - இந்தச் செய்யுள் அடிகளில் இடம்பெற்றுள்ள எண்ணுப்பெயர்களையும் அவற்றிற்கான தமிழ் எண்களையும் தேர்க.
   (அ) நான்கு, ஐந்து - ச, ரு (ஆ)மூன்று, நான்கு - ௩, ச
   (இ) ஐந்து, ஏழு - ரு, எ (ஈ) நான்கு, ஆறு - ச, சு
2. ஓர் ஆண்டின் மொத்த மாதங்களின் எண்ணிக்கையினைக் குறிக்கும் தமிழ் எண்ணைத் தேர்ந்தெடுக்க.
   (அ) க ரு (ஆ) க உ (இ) க ௩ (ஈ) க ச
3. ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி
   - இத்தொடர்கள் உணர்த்தும் மரங்களின் பெயர்களையும், தமிழெண்களையும் குறிப்பிடுக.
4. தொகைகள் குறிக்கும் தமிழ் எண்கள் எழுதுக.
   1. ஓரிடம் 2. இருவினை 3. இரு திணை 4. முத்தமிழ் 5. முக்கனி
   6. முப்பால் 7. மூவேந்தர் 8. மூவிடம் 9. நாற்குணம் 10. நாற்றிசை
   11. நான்மறை 12. நானிலம் 13. ஐந்திணை 14. ஐம்பால் 15. ஐம்பொறி
   16. பஞ்சபூதம் 17. அறுசுவை 18. எழுவர் 19. எழுவகை 20. எண்திசை
   21. எண்சாண் 22. எட்டுத்தொகை 23. நவரசம் 24. நவரத்தினம் 25. பத்துப்பாட்டு